# தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை 30-3-57 சனிக்கிழமை | இதழ் 28


"சிந்திரித் தொழில் சிறக்கிறது வடக்கே. முந்திரித் தொழிலும் தேய்கிறது தெற்கே"

"நாட்டு வாட்டம் போக்கிட சர்க்கார் நோட்டடித்தால் போதாது."

"அரியலூர் அழகேசரே, ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா?'

"ஆட்டிவைப்பவர் வடக்கே! ஆடும் பதுமைகள் தெற்கே."

"காகிதப்பூ மணக்காது காங்கிரஸ் சமதர்மம் இனிக்காது."

—சுவையும் பொருளும் நிறைந்த இத்தகைய சுவரொட்டிகள் நாட்டில் எந்த அளவுக்கு எதிரொலியை உண்டாக்கியிருக்கிறது என்று காமராசரிலிருந்து கக்கன் வரையுள்ள தேசியத் தலைவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்று நாம் திடமாக நம்புகிறோம். 'வாய்ப்பேச்சு வீரர்கள்! வாசகம் அமைப்பதிலே வல்லவர்கள்' என்று காமராசர் தெருவுக்குத் தெரு பேசிய பேச்சுக்கள் இன்னும் மறையவில்லை. தமிழ் மக்களின் உள்ளங்களில் அந்தக் 'குரல்' இன்னும் ஊர்ந்து கொண்டுதானிருக்கிறது. ஆனால், அதற்குள்ளாகவே, காமராசரால் இகழப்பட்ட அந்த 'வாசகம் வல்லார்'கள் கடற்கரையிலே கூடி வெற்றிவிழாக் கொண்டாடப் போகிறார்கள் என்ற இன்பச்சேதியும் தமிழ்மக்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது.

"மகா ஜனங்களே, தி.மு.க.வினர் மாய்மாலக்காரர்கள். அவர்களது அடுக்குச் சொல்லில் மயங்கிவிடாதீர்கள்" என்று எந்த மக்களைப் பார்த்து மந்திரிகள் 'பிரசங்கம்' புரிந்தார்களோ அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சென்னையிலே ஒன்று கூடி ஜெயபேரிகை கொட்டப் போகிறார்கள்.

"ஆஸ்திகமா? நாஸ்திகமா? அண்ணாத்துரை வேண்டுமா? நேருஜி வேண்டுமா?" என்ற அநாகரீக வாதங்களுக்கிடையே, நீதியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா,

செய்வன திருந்தச் செய்து, சொல்வன அழகாய்ச் செப்பி, காசுக்கும், கல்விக்கும் வித்தியாசம் அறிந்த வாக்காளர்களால் வாகைசூடப் பெற்ற பேராசிரியர் அன்பழகன்,

"நாடகக்காரர் இவர், நாட்டை யாளத் தெரியுமா இவருக்கு"—என்று தான் வகுத்த 'வட்டச் சிவப்பு'க் கொடிக்காரர்களால் வீதிக்கு வீதி பேசப்பட்டாலும், 'வெற்றி உதயசூரியனுக்குத்தான்; குளித்தலைத் தொகுதியினர் இடும் நெற்றித்திலகம் எனக்குத்தான்' என இறுதிவரை போராடி அறுவரையும் அலறவைத்த கலைஞர் கருணாநிதி,

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு-இவை மூன்றும், பட்டம், பதவி, பணம் - இவைகளுக்கிடையே பெரும்போர் நிகழ்த்தி, ஏன் கடன் பணிசெய்து கிடப்பதே-என்ற புனிதமான வரியை வெற்றி கொள்ளச் செய்த குணக்குன்றம் கோவிந்தசாமி,

'பொல்லாத நேரமிது, செல்லாத நோட்டுக்கள் நடமாடக் கூடும்' என்று காங்கிரசாரின் 'பணநாயக'த்தை பறைசாற்றி, பாயிரம்பாடி, ஆயிரம்விளக்கில் பகைப்புலத்தை முறியடித்த ஆசைத்தம்பி,

'பாவிகள் இவர்கள்' என்று ஏசும் காவியுடைக்காரர்கள் நிறைந்த இடமானாலும் கழகத்தின் புனிதத்தன்மையை முன்வைத்து வெற்றிபெற்ற திருவண்ணாமலை முன்னோடி ப. உ. சண்முகம்,

பெண்ணடிமை நீங்க முதலிலே பெண்ணடிமை யொழியவேண்டுமென நித்தமும் பணியாற்றி வெற்றி பெற்ற திருமதி சத்தியவாணிமுத்து,

தூற்றலைத் துச்சமெனக் கருதி ஆற்றல் கொண்டு வெற்றி கொண்ட ஆத்தூர் சுப்ரமணியம்,

ராணுவத்தை ஏவுவேன், ராஜ்யக்கட்சியை அழித்தொழிப்பேன் என்று வேலூரில் கர்ஜித்த நேருவின் நெஞ்சுக்கு துக்கச் செய்தி அனுப்பும் வகையில் 'காளைமாடு'களை ஜோடிச்சுருட்டி ஓடவைத்த எம். பி. சாரதி,

கழக வீரர் களம்பூர் அண்ணாமலை, சுயமரியாதைச் செல்வம் திருவண்ணாமலை சந்தானம், இலட்சியக் காளைகள் இராசப்பன், விருத்தாசலம் செல்வராஜ், கள்ளக்குறிச்சி நடராசன், ஆனந்தன், ஆகியோரும்,

வடதேசம் போய், வளமான தென்னாட்டின் விலங்கொடிக்கப் பேசப்போகும் சொல்வலர் சம்பத், திருவண்ணாமலைத் தர்மலிங்கம், ஆகியோரும் வருகின்ற ஞாயிறன்று கடற்கரையில் கழகத்தின் வெற்றி பற்றிப் பேசப் போகிறார்கள்.



தேசியத் தமிழர்களே, கழகத்தின் 'வாசல் வல்லமை'யை கேட்டிடத் தவறாதீர்கள். மார்ச் 31ம் நாள்! கடற்கரையில் திராவிடர் அணி! ★



# பரிசுப் புடவை

★ ப. வாணன் ★

இந்தக் குறுநாவலை நமக்களித்திருக்கும் ப. வாணன் அவர்கள், இன்றையச் சமுதாய எழுச்சிக்கு மூலகர்த்தாக்களாக விளங்கும் மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர்.

'ரஷ்ய இலக்கியம்' என்ற நூலைத் தமிழகத்துக்குப் படைத்து அறிஞர் அண்ணு அவர்களின் பாராட்டுதலைப் பெற்றவர்.

'திராவிட நாடு' இதழில் 'அமைந்த பாதை' என்ற தொடர்கதை தீட்டி தமிழ்நேயர்களின் அன்பைப் பெற்றவர். (ஆ-ர்.)

காரில் போய்க் கொண்டிருக்கும் போது ஆசிரியர் கொடுத்த குறிப்புகளை மறுபடியும் பார்த்துக் கொண்டேன். நான்கு நாட்களுக்கு முன் பசுபதி முதலி தெருவில் நடந்த பயங்கரக் கொலையைப் பற்றிய பத்திரிகைச் செய்திகள் அவை. "ஆருவது மாடியில் வசிக்கும் தனபால் என்பவருக்கும் கோமதி நாயகம் என்பவருக்கும் நடந்த வாக்குவாதம், கைச்சண்டை அளவில் வந்து முடிவில் தனபால் 'ஓ' வென்ற பேரிரைச்சலோடு மாடியிலிருந்து கீழே விழுந்து சுக்கு நூருனர்! போலீசார் வந்து கோமதிநாயகத்தைக் கைது செய்தனர். தனபாலின் மனைவி சக்குபாயிடம் வாக்கு மூலம் பதிவு செய்துகொண்டனர்." இவ்வளவுதான் பத்திரிகைத் துண்டுகளில் திரும்பத் திருப்ப எழுதப்பட்டிருந்த விஷயம். எங்கள் பத்திரிகை ஆசிரியருக்கு இந்த சம்பவத்தைப் பற்றிய பூரா விபரமும் வெளியிட பெரும் ஆவல். பத்திரிகையில் கொலை விபரங்களைப் படிப்பதில் மக்களுக்கு தனி பிரியமாயிற்றே! அதுவும், இந்த சம்பவத்தில் ஒரு பெண், இரண்டு ஆண்கள்! காதல், களவு நட்பு, எல்லாம் இருக்கிறதே! இப்படிப்பட்ட சம்பவத்தின் உண்மை விபரங்களைச் சேகரித்து வெளியிட்டால் பத்திரிகை எண்ணிக்கை தானுக உயருமே? ஆகவேதான், கொலையைப்பற்றி முழு விபரமும் அறியும்வரை நீ இங்குவரவே வேண்டாம் என்று என்னை அனுப்பி விட்டார் ஆசிரியர். எனக்கும் இந்தச் சம்பவத்தை ஆராய்வதிலே ஒரு தனி ஆசைதான். தினம் தினம் கவர்னர் மாளிகை விருந்துகளைப் பற்றியும், மந்திரிகளின் டீக்கடை ஆரம்ப விழாக்களைப் பற்றியும் "ரிப்போர்ட்" செய்துகொண்டிருப்பதைவிட, இப்படிப்பட்ட உணர்ச்சியான செய்திகளை சேகரிப்பதில் யாருக்குத்தான் ஆசை தோன்ருது?

பசுபதி முதலி தெரு திருப்பத்திலேயே காரை நிறுத்தி இறங்கி விட்டேன். அறுபத்திஒன்றும் நம்பர் வீட்டை தேடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. ஏழு மாடிகள் கொண்ட வீட்டிற்கு அடையாளம் எதற்கு? சம்பிரமாக வானைத் தொட்டுக்கொண்டு நின்றது "சங்கர்லால் மான்ஷன்". இதில் ஆருவது மாடியிலிருக்கும் இருபதுக்கு மேற்பட்ட அறைகளில் ஒன்றில்தான் தனபாலும் அவர் மனைவி சக்குபாயும் இருந்திருக்கின்றனர். பக்கத்து அறையில் கோமதி நாயகம் வசித்திருக்கிருர். பசுபதி முதலி தெரு, பெயர்தான் பழசே ஒழிய, ரோடு காங்கிரீட் போடப்பட்டு சீராக இருந்தது. இதில் ஆருவது மாடியிலிருந்து ஒருவன் விழுந்தால், உடல் எப்படி உயிரோடு ஒட்டிக்கொண்டிருக்க முடியும்?

கொலைக்கு சம்பந்தபட்டவர்கள் இரண்டு பேர். கோமதி நாயகமும், சக்குபாயும். கோமதி நாயகம் போலீசாரால் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டிருந்தார். சக்குபாய், கணவனை இழந்த துக்கத்தில் அறைக் கதவை தாளிட்டுக் கொண்டு தனிமையை நாடி இருந்தாள். இந்த இருவரையும் தவிர, தனபால் ஆருவது மாடியிலிருந்து எப்படி விழுந்தார்? ஏன் விழுந்தார்? விழுந்தாரா அல்லது தள்ளப்பட்டாரா என்று வேறு யாருக்கும் தெரியாது. நான் என்னென்ன ஜாலங்கள் செய்தேன் என்பது இப்போது முக்கியமல்ல. எப்படியோ இந்த இருவரையும் சந்தித்து அவர்கள் வாயாலேயே சம்பவத்தின் பூரா விபரத்தையும் பெற்றேன். இதோ, அவர்கள் கூறியவை. முதலில் அதைப் படியுங்கள்:

## கோமதிநாயகம்

நான் சென்னைக்கு வந்து சுமார் 14 ஆண்டுகள் ஓடிவிட்டன. அப்பொழுது உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ஜப்பானியரின் குண்டுகள் எந்த நேரத்தில் விழுமோ என்ற பீதியில், பரம்பரை பரம்பரையாக சென்னையிலிருந்து வந்த மக்கள் கிராமங்களுக்கு சென்றுகொண்டிருந்தனர். அந்தக் காலத்தில் இந்த ஏழடுக்குக் கட்டிடத்தில் மொத்தமாக பத்து பேர் இருந்தால் அதிகம். அதுவும் மாடிக்கு ஒருவராக இருந்தோம். இந்தக் கட்டிடத்திற்குள் பெண் வாடையே அடிக்காது!

சங்கர்லால் கம்பெனியில் குமாஸ்தா வேலைபார்த்து வந்தேன் நான். வாழ்க்கைக்குத் தேவையான துணியிலிருந்து சோப்பு, சீப்பு கண்ணுடி, வரை எல்லா சாமான்களும் இறக்குமதி செய்துவந்த, அவர்களுடைய லாபத்தை கேட்க வேண்டுமா? எனக்கு மாதச் சம்பளத்தோடு, அவர்களுக்கு சொந்தமான இந்தக் கட்டிடத்தில் இந்த அறையும் குடியிருப்புக்கு இனுமாகக் கொடுக்கப்பட்டது. மிக நிம்மதியாக, கடற்காற்றை வாங்கிக்கொண்டு காலங் கடத்தி வந்தேன். இரவு நேரங்களில் எதிரியின் குண்டுகளுக்கு பயந்து சென்னை நகரமே தூங்கிக்கொண்டிருக்கும்போது, நான் இந்த பலகணி வழியாக இருளில் சென்னையின் அழகை ரசித்துக்கொண்டிருப்பேன்! இங்கிருந்து பார்த்தால் சுமார் 10 மைலுக்கு சென்னையின் சுற்றுவட்டாரமே தெரியும்.

உலக யுத்தம் முடிந்தது. சென்னையும் தலைகீழாக மாறியது. நாட்டின் எல்லா பகுதியிலிருந்தும் வேலை தேடி, லாபந் தேடி, நல்லது, பொல்லாதது எல்லாம் தேடி சென்னை பூராவும் மக்கள் கூடினர். மக்கள் குடியிருப்பதற்கு வீடுகள் கிடைக்காமல் இந்த மாதிரி அறைகளில் கூட குடியிருக்க ஆரம்பித்தனர். சுருங்கச் சொன்னுல் பம்பாய் வாழ்க்கை முறை, சென்னையிலும் குடியேறியது.

போன ஆண்டு ஆரம்பத்தில் தான் அதோ, அந்த பத்தாம் நம்பர் அறைக்குக் குடிவந்தார்கள், தனபாலும், அவர் மனைவியும். அவர்கள் வந்த அன்றைக்கே தனபாலை நான் சந்திக்க நேர்ந்தது. நானும் குளிக்க துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு குளிக்குமறைக்குப் போனேன். அவரும் அதே மாதிரி வந்தார். அவரைப் பார்த்தவுடன், நான் என் அறைக்கு போக திரும்பினேன்.

"பரவாயில்லை...நீங்கள் குளியுங்கள். நான் பிறகு குளிக்கிறேன்!"

"இல்லை...நீங்களே குளியுங்கள். எனக்கு இன்னும் நேரம் இருக்கிறது" என்றேன். அவர் சிரித்துக் கொண்டே குளிக்கும் அறைக்குள் போய் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டார். நானும் சிரித்துக் கொண்டே திரும்பினேன். அங்கே நான் கண்ட காட்சி என்னை திகைக்க வைத்துவிட்டது. தங்கச் சிலைபோல பெண்ணழகி ஒருத்தி கையில் சோப்புடன் நின்றுகொண்டிருந்தாள். ஒருகணம் திகைப்புடன் இருவரும் பார்த்துக்கொண்டோம். மறுகணம் வேகமாக என் அறைக்கு ஓடிப்போய்விட்டேன். அவள் அழகோ, அல்லது அவள் பார்த்த பார்வையோ, எதுவோ என் உடலை ஒரு குலுக்கு குலுக்கி விட்டது. பிறகு சிறிதுநேரத்தில் அவர்கள் இருவரும் பேசிக்கொண்டே தங்கள் அறைக்குள் போவது கேட்டது. அதன் பிறகு நான் போய் குளித்துவிட்டு கடைக்குப் போய் விட்டேன். ஆம்! அதைச் சொல்ல மறந்துவிட்டேனே! சண்டை முடியும் நேரத்திலே, சங்கர்லால் கம்பெனியார் ஜவுளிக்கடை ஒன்றை சைனுபஜாரில், சில்லறை வியாபாரம் செய்வதற்காகத் திறந்தனர். அதற்கு கம்பெனி முதலாளியின் இளையசகோதரர் பொறுப்பாளியாகவும், நான் காரியஸ்தராகவும் நியமிக்கப்பட்டேன்! அன்று கடைக்குப் போய் சில நிமிஷ நேரங்களில் காலையில் கண்ட 'கண்களை' மறந்துவிட்டேன். ஆனுல் அவைகளை முழுவதும் மறக்கமுடியாதபடி அன்று மாலையே, அந்தத் தம்பதிகள் இருவரும் எங்கள் கடைக்கே வந்து சேர்ந்தனர். காலையில் பார்த்ததைவிட இன்னும் ஆயிரம் மடங்கு அழகாக இருந்தாள் அந்த ஆரணங்கு. காலையில் இருபத்திஐந்து வயது மதிப்பிட்டால் இப்பொழுது இருபதுகூட அதிகமாகத் தோன்றியது. அவரோ என்னைவிட நாலைந்து வயது அதிகமாக தோன்றினர். கடைக்குள்ளே நுழைந்ததுமே என்னை அடையாளம் தெரிந்துகொண்டு புன்முறுவல் பூத்தார். அவளும் கடைக்கண்களால் பார்த்தாள்.

(தொடரும்)

# உரிமைக் குரல்!

## தேர்தலும் நாமும்—(3)

தேர்தலில் தி. மு. கழகம் அடைந்த தோல்விகளுக்கெல்லாம் 'திராவிட நாடு பிரச்னை'தான் காரணம்போல சில எதிர்க்கட்சி நண்பர்கள் பேசி வருகிறார்கள். அவர்கள் பேச்சின் போக்கைக் கவனித்தால் வாக்காளர்கள் எல்லோருமே மிகுந்த ஆராய்ச்சி நடத்தி தி. மு. கழகத்திற்கு ஓட்டுப் போட மறுத்துவிட்டதாக எண்ணத் தோன்றும். திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கை 'நஞ்சு' என அவர்கள் முடிவு கட்டிவிட்டதாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுவா? இல்லை! இது வெறும் அரசியல் ஆராய்ச்சி நடத்துவோருக்குத் தெரியாது. இந்தத் தேர்தலில் இறங்கி அனுபவப்பட்டவர்களுக்குத் தெரியும். வாக்காளர்களில் கணிசமான ஒரு பகுதியினருக்கு கட்சி, கொள்கை எதுவுமே தெரியாது. மற்றொரு பகுதியினருக்கு தேர்தலில் காசு வாங்க மட்டும் தெரியும். இவர்கள் போக மிச்சமிருப்பவர்களைத்தான் பல கட்சிகள் பிடித்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்சியிலும் கணிசமான வாக்காளர்கள் இருக்கிறார்கள். ஒரு கட்சி வெற்றிபெறவேண்டுமானால் அந்தக் கட்சியின் கொள்கைகளை ஆதரிக்கும் வாக்காளர்களோடு முதலில் குறிப்பிட்ட இரண்டு வகை வாக்காளர்களும் சேர்ந்து வாக்களிக்க வேண்டும். அந்த இரண்டு வகை வாக்காளர்கள் எந்தப் பக்கம் சாய்கிறார்களோ அந்தப் பக்கத்திற்கு வெற்றி நிச்சயம். நூற்றுக்குத் தொண்ணூறு தொகுதிகளின் நிலைமை இதுதான். அந்த இரண்டு பகுதியினரையும் பிடித்து இழுத்துவர எந்தக் கொள்கையாலும் முடியவில்லை. இந்தத் தேர்தலில் பணம் ஒன்றுதான் அவர்களை இழுத்தது. அந்தப் பணம் காங்கிரஸ்காரர்களிடம் தானிருந்தது. அதனால்தான் காங்கிரஸ்காரர்கள் பெரும்பகுதி இடங்களைப் பிடிக்க முடிந்தது. ஆகவே, காங்கிரசுக்கு விழுந்த வாக்குகளில் நூற்றுக்கு எண்பது காசுக்காக விழுந்ததே தவிர கட்சிக்காக விழுந்ததல்ல. ஆனால் எதிர்க்கட்சியாகிய தி. மு. க. வுக்கு விழுந்த ஒவ்வொரு வாக்கும் லட்சியத்திற்கு விழுந்த வாக்குகளாகும். தி. மு. கழகத்திற்கு விழுந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ள 16 லட்சம் வாக்குகளும் திராவிட நாட்டுப் பிரிவினையில் தீராத பற்றுக்கொண்டுள்ள வாக்குகளாகும். மேலோட்டமாகப் பார்த்தால்கூட இந்த உண்மையைப் புரிந்துகொள்ள முடியும். ஆகவே கழகத்தின் லட்சிய எல்லையாகிய பிரிவினைக் கொள்கை மக்களாலே வெறுக்கப்படவில்லை என்பது நிரூபணமாகிவிட்டது. அரசியல் இயக்கங்களின் மேல் தளத்திலே இருந்துகொண்டு ஒவ்வொரு கொள்கையின்மீதும் கருத்துரை தர முற்படுவோர்தான் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை வேம்பு, விஷமென்கிறார்கள். இவர்களுடைய கருத்துக்கள் பலராலும் கவனிக்கப்படுகின்றன என்பதைத் தவிர அரசியலில் இவர்கள் மிகச் சிறிய பகுதியினர்தான். இவர்கள் பேசும் கொள்கைகளுக்கு நமது கொள்கை எதிராக அமைகிறது என்பதாலேதான், தாங்கள் எதிர்ப்பதை மக்களும் எதிர்ப்பதாக இவர்கள் கதை கட்டுகிறார்கள். இவர்களது கருத்துக்களைக் கண்டு யாரும் தடுமாறத் தேவையில்லை.

காங்கிரஸ் கட்சியின் ஜனநாயக அடிப்படையையும், கம்யூனிஸ்டுக் கட்சியின் பொருள் முதல் வாதத்தையும் தமிழரசுக் கழகம் போன்ற சில்லறைக் கட்சிகளின் தமிழ்ப் பற்றுதலையும் ஒருங்கே கொண்டு திகழ்வது திராவிட முன்னேற்றக் கழகமென்றால் மிகையாகாது. நில, இன, மொழி வரலாறுகளை அடிப்படையாகக்கொண்டு தனியாட்சி கோருவது, ஒன்றும் பாதகமான செயலல்ல! தான் பிறந்த நாட்டுக்கு மட்டும் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் ஒருவன் இந்த அடிப்படைகளைத்தான் கவனிக்க முடியும். 'உறவுக்கு இது, உரிமைக்கு இது' என இரண்டு எல்லைகளைச் சிலரும், இன்னொரு நாட்டுக்கெனத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு இங்கே சிலரும் வேலை செய்வது போல் தி. மு. கழகமும் வேலை செய்ய வேண்டுமென அவர்கள் நினைக்கிறார்கள். "இந்தியாவிலிருந்து பிரிவதா? நேருவை விட்டு விலகுவதா?" என்று அவர்கள்தான் கூக்குரல் போடுகிறார்கள். அவர்களுக்கே 'ஏக இந்தியா'க் கொள்கையில் நம்பிக்கை உண்டோ இல்லையோ, அதைத்தான் அவர்கள் சொல்லித் தீர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கொஞ்சம் அழுத்தமாகவே சொல்வதானால், அரசியலில் உடனடியாகக் கிடைக்கும் சில லாபங்களுக்காகவும், தான் பெரிய சர்வ தேசீயவாதி என்று பிறர் மதிக்க வேண்டும் என்பதற்காகவுமே 'ஏக இந்தியா'க் கொள்கையை அவர்கள் எழுப்புகிறார்களேயல்லாது அவர்கள் கூற்றுக்கு, பொருளாதார, இன, மொழி பூர்வமான அடிப்படை கிடையாது. இவர்கள் திருத்தப்பட்டால் நாட்டுக்கு நன்மை பிறக்கும். ஆனால் துர்பாக்கியவசமாக நாம் தவறு செய்வதாகக் கருதி இவர்கள் நம்மைத் திருத்த முயற்சிக்கிறார்கள்.

கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும் நீதிபதியின்மீது குற்றப்பத்திரிகை வாசிப்பது போன்ற அரசியல் தர்மம்தான் இப்பொழுது நடைபெறுகிறது. "நானொரு முடிவுக்கு வந்துவிட்டேன். நீ உன் வாதத்தைத் தொடங்கு" என்ற பழமொழி போல, நமது கொள்கைகளை ஏற்றுக்கொள்வதில்லை என்று முடிவு கட்டிக்கொண்டே நமது வாதத்தை இவர்கள் கேட்கிறார்கள். ஆகவே, இவர்களுக்கு நாம் என்ன சொன்னாலும் ஏறப் போவதில்லை. நம் முன்னுள்ள ஒரே வழி, மிகச் சிறுபான்மையினராக இருந்துகொண்டு பெரிய இடங்களைப் பிடித்தபடி கருத்துரை வழங்கும் இவர்களை அலட்சியப்படுத்திவிட்டு, பெரும்பான்மையினரும் தெளிந்த நல்லறிவு படைத்தவர்களுமான பொதுமக்களிடத்திலேயே இன்னும் அதிகத் தொடர்பு கொள்வதுதான்.

கண் கண்டறியாத கிராமங்களுக்கும், அதிதீவிரமாக நமது பிரச்சாரத்தைப் பரவ வைப்பதுதான்.

இதுவரை எல்லாக் கட்சிகளும் சட்ட சபைக்குள் நுழைந்த பிறகு பொதுமக்களின் நேரடித் தொடர்பை இழந்துவிட்டிருப்பதைக் காணுகிறோம். தமிழகத்தில் கம்யூனிஸ்டுகளின் இன்றையத் தோல்விகளுக்குக்கூட கம்யூனிஸ்டு வட்டாரத்தினர் இந்தக் காரணத்தைத்தான் சொல்கிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக்கழகம் மக்கள் தொடர்பை இழந்துவிடாது. காரணம், மக்களில் பெரும்பான்மையினர் அன்றாடப் பிரச்சினைகள் உட்படப் பல விஷயங்களில் கழகத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அதிசயிக்கத் தக்க ஒரு வளர்ச்சியைக் கழகம் பெற்றிருக்கிறது. இந்த வளர்ச்சியை மேலும் மேலும் அதிகப்படுத்தி திராவிட நாடு பிரச்சினைக்காக இறுதிவரை போராடுவோம் நாம். "அதை விட்டால் கழகம் வளரும்; இதை விட்டால் கழகம் வளரும்" என்றெல்லாம் வெளியிலிருந்துவரும் அபிப்பிராயங்களை நாம் துளியும் பொருட்படுத்த வேண்டியதில்லை.

இறுதியாக, இந்தத் தேர்தல் நமக்குத் தரும் பாடமெல்லாம் கண்காணாத இடங்களிலெல்லாம் வளர்ந்திருக்கும் கழகத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான். அறிவும் ஆற்றலுமிக்க நமது தலைவர்கள் இதைச்செய்து தருவார்கள். அவர்களோடு ஒத்துழைத்து வீணர்களை அழித்து அரசியல் லம்பாடிகளைக் குழி தோண்டி மூடி புதிய சமுதாயம் படைப்பதும் தனி நாடு காண்பதும் நமது நீங்காக் கடமையாகும். வாழ்க தமிழ்! வாழ்க திராவிடம்! ★

**கண்ணதாசன்**

### வியாதி எது ?

ஒரு நோயாளி குடல் வியாதியால் துடித்துக் கொண்டிருந்தார். டாக்டருக்கு ஆள் அனுப்பினார். உடனே டாக்டர் வந்து சேர்ந்தார். நோயாளியைப் பரிசோதித்தார். நோயாளிக்குத் தனது வியாதி எது என்று புரியவில்லை.

"ஏன் சார்! இது குடல் வியாதியாக இருக்குமோ" என்று கேட்டார்.

"அப்படியெல்லாம் இல்லை! இந்த வியாதி தாங்கள் சாப்பிடுகின்ற ஆகார முறையினால் வந்தது" என்று சாவதானமாகப் பதில் சொன்னார் டாக்டர்!

,, போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !"


# எண்ணம்

மலர் 3 ‖ 30—3—57 ‖ இதழ் 28


## இது ஒரு பேச்சா ?

தேர்தலிலே வெற்றி பெற்ற காங்கிரஸ் அபேட்சகர்கள், தோற்றுப்போன காங்கிரஸ்காரர்களுக்கு சமாதானம் கூறுகின்ற வகையில் நாடெங்கும் பலப்பல பிரசங்கங்களை நடத்திவருகிறார்கள். ஒரு சில குறிப்பிட்ட இடங்களில், இந்தத் தொகுதியில் ஏன் காங்கிரஸ் தோற்றது என்றும் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். அந்த வகையில் "உயர்திரு" சுப்ரமண்யம் அவர்கள் கோவையில் பல பகுதிகளில் பலவகைப்பட்ட சொற்பொழிவுகள் நடத்தியிருக்கிறார். மாலையிலே நான்கு மணிக்குப் பேசிய பேச்சுக்கும், மனோகரமாக ஏழு மணிக்குப் பேசிய பேச்சுக்கும் மோதுதல் ஏற்படும் விதத்தில் இந்த அரசியல் வக்கீல் பேசியிருக்கிறார்.

"மக்கள் காங்கிரசின் மீது மீண்டும் நம்பிக்கை தெரிவித்து விட்டனர்" என்று ஓரிடத்திலே பேசியிருக்கிறார். உள்ளபடியே, காங்கிரஸ் கட்சி அடைந்த வெற்றியின்மீது திடமான நம்பிக்கை வைத்து அவர் இவ்வாறு பேசியிருக்கிறாரென்று நம்மால் நம்ப முடியவில்லை. அப்படியானால், தோற்றுப்போன சிலரைப் பற்றி, அவர் பேச வேண்டிய அவசியமில்லை. மக்கள் வைத்த நம்பிக்கையால்தான் பெரும்பாலான காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றிபெற்றார்களென்றால் தோற்றவர்கள், மக்கள் நம்பிக்கை இழந்தவர்கள், தொண்டாற்றத் தகுதியற்றவர்கள், நேர்மையாக நடக்கத் தெரியாதவர்கள் என்றுதானே பொருள், சுப்ரமண்யத்தின் வாதப்படி! ஆனால் வெற்றிக்குக் காரணம் கூறிய, மனச்சாந்தி செய்துகொண்ட சுப்ரமண்யம், தோல்விக்கு ஏன் புதிய காரணங்களைத் தேடிப்பிடிக்க வேண்டும்.

காலையில் பேசிய கூட்டத்தில் வெற்றியைப் பற்றி பேசினார். ஆனால் மாலையில் பேசிய கூட்டத்தில் தோல்விக்கு விசித்திர விளக்கம் தர முற்பட்டிருக்கிறார். என்ன அந்த விளக்கம்?

**"தேர்தல் குதிரைப் பந்தயத்தைப் போன்றது; மிகவும் தகுதி வாய்ந்தவர்கள் தோல்வியடைந்துவிடுவார்கள்; சில சந்தர்ப்பங்களில்; சிறிதும் தகுதியே இல்லாதவர்கள் வெற்றி பெற்றுவிடுவார்கள்; ஆகவே, அபேட்சகர்கள் வெற்றி தோல்விகள் பலவிஷயங்களைப் பொறுத்திருக்கிறது."**

இது சுப்ரமண்யத்தின் கருத்து. தேர்தல் குதிரைப் பந்தயம் போன்றதாம்! அப்படியானால், 'மக்கள் நம்பிக்கை வைத்துவிட்டார்கள்' என்ற வாசகத்தின் பொருள்தான் என்ன? வெற்றிபெற்ற காங்கிரஸ்காரர்களெல்லாம் எப்படி வந்தவர்கள்? பந்தயத்தில் வருவதுபோல் எதிர்பாராமல் வந்தவர்கள்தானா? அதையாவது வெளிப்படையாகச் சொல்லட்டும். சில சந்தர்ப்பங்களில் சிறிதும் தகுதியே இல்லாதவர்கள் வெற்றி பெற்றுவிடுவார்களாம்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரி, கக்கன், சேலம் மாரியப்பன் போன்றவர்கள் எந்த அடிப்படையில் வெற்றிபெற்றவர்கள்? மக்கள் வைத்த நம்பிக்கையாலா அல்லது குதிரைப் பந்தயத்தில் வருவதுபோல் வந்தவர்களா ? அடுத்தாற்போல் சொல்கிறார், 'தகுதி வாய்ந்தவர்கள் தோற்றுவிடுவார்கள் சில சந்தர்ப்பங்களில்!' ஆர். வி. சுவாமிநாதன், ராதாகிருஷ்ணபிள்ளை, திருமங்கலம் ராஜாராம் ஆகியோரின் தோல்விக்குச் சமாதானம் கூறுவதுபோல், 'சில சமயங்களில் தகுதி வாய்ந்தவர்கள் தோற்றுவிடுவார்கள்' என்கிறார். எந்த மக்கள் வெங்கடசாமி நாயுடுவைத் தோற்கடித்தார்கள்! அவர்களும் இந்த நாட்டுப் பிரஜைகள்தானே! வாக்காளர்கள்தானே! வெற்றிபெற்றவர்களுக்கு உபயோகிக்கப் படும் 'மக்கள் நம்பிக்கை' என்ற வார்த்தையை, அந்தப் பெரியவர், தோற்றவர்களுக்கு ஏன் 'அவ நம்பிக்கை கொண்டார்கள்' என்று சொல்லவில்லை ? நா கூசுவது ஏன்? இந்த இடத்தில் மட்டும் எதற்காகத் தத்துவஞானியைப்போல் 'தேர்தல் குதிரைப் பந்தயம்' என்று பேச வேண்டும்! தகுதி வாய்ந்தவர்கள் தோற்றார்களென்றால் சேலத்தில் நெடுஞ்செழியனைச் சொல்லலாம்! தென் சென்னையில் பி. பாலசுப்பிரமணியத்தைச் சொல்லலாம். இவர்கள் எப்படித் தோற்றார்கள்? காங்கிரசார் எப்படிச் ஜெயித்தார்கள்? மக்கள் நம்பிக்கை வைத்து காங்கிரஸ் அறிவாளிகளைத் தேர்ந்தெடுத்துவிடவில்லை, தமிழகத்து மாந்தர் வாங்கிய காசுக்குத் துரோகம் நினைக்காத பரம்பரையினர். அதனால்தா காங்கிரசார் வெற்றிபெற முடிந்தது. உண்மையில் தோற்ற கள் தி. மு. கழகத்தவர்களல்ல; மக்களின் அபிமானத்தைப் பெ முயற்சித்துத் தோல்வி கண்ட காங்கிரஸ்காரர்கள் கடைசி நேர தில் பணத்தைக் கொடுத்து பாமர மக்களை வலையில் விழவைத்த களே தவிர, உண்மையில் தோற்றவர்கள் காரங்கிரஸ்காரர்க தான். பி. பாலசுப்ரமணியம் அவர்களின் வாசகத்திலேயே சொல் தானால் 22-3-57-ம் தேதியன்று சென்னை மெமோரியல் மண் பத்தில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசியதை நி வுறுத்துவோம் :

"நான் இன்று உங்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கா இங்கு வந்தேன். உங்களுக்கு என்றால், எனக்கும், எ னுடைய கட்சிக்கும் ஓட்டும்போட்ட ஓட்டர்களுக்கு நன் தெரிவிப்பதற்காக வந்தேன். அப்படியானால் எதிர்த்து ஓ டுப் போட்டவர்களுக்கு நன்றி தெரிவிப்பது நாகரீகமல்லவா என்று வினவலாம். உண்மை. அவர்களுக்கும் நான் நன் செலுத்தத்தான் வேண்டும். ஆனால் உயிருடன் இருப் வர்களுக்குத்தானே என்னால் நன்றி செலுத்த முடியும்! செத்து போனவர்களுக்கு காங்கிரஸ்காரர்கள் தேர்தல் காலத்திலே மட்டு உயிர்கொடுத்து ஓட்டர்களாக்கினார்கள். பிணங்களுக்கு என்ன எப்படி நன்றி செலுத்த முடியும்........இன்று நான் சட்டப் தோற்றுவிட்டிருந்தாலுங்கூட 'ஆத்மார்த்'திகமாக நான்தா வெற்றி பெற்றிருக்கிறேன். நான் பெற்ற வெற்றி, பண கொடுத்து வாங்கப்பட்ட ஓட்டுகளின் அடிப்படையில் கண கெடுக்கப்பட்டதல்ல. மக்களின அன்பை அளவு கோலாக கொண்டு கணிக்கப்பட்டது"

இதில், பெரும் பகுதிக் காங்கிரஸ்காரர்கள் வெற்றிபெற் பாவக்கறை படிந்த வரலாறு புதைந்து கிடக்கிறது. ஆனா சுப்ரமண்யம் சொல்கிறார் காங்கிரஸ்மீது மக்கள் நம்பிக்கை வைத் விட்டார்களென்று. மக்கள் ! யார் அவர்கள் ? எத்தனை ஆயிரம் ஓ டுகள் காங்கிரசார் அதிகமாகப் பெற்றது? எதிர்க் கட்சிகளை மக்கள் விரும்பவில்லை என்று எண்ணத்தக்க வகையில் காங்கிரஸ் அபேட் சர்கள் அதிக வாக்குகள் பெற்றிருந்தால், காங்கிரசின்பால் மக்கள் நம்பிக்கை வைத்துவிட்டார்கள் என்று சொல்வதிலே அர்த்த மிருப்பதாக நம்பலாம்; உண்மைதானோ என்று பெருமூச்சுவிட இடமிருக்கிறது.

'வானத்தை வில்லாய் வளைப்பேன், மணலைக் கயிறாக்குவேன் என்று சூளுரைத்த சுப்ரமணியமே அதிக வோட்டு வித்தியாசம் காண்பிக்க முடியவில்லை. இத்தனைக்கும், அதிகாரம் பெற்றிருந் தவர், ஆள் பலம் வைத்திருந்தவர், கடந்த ஐந்து ஆண்டு கால தில் மக்களுக்கு எதையும் சாதிக்கும் வல்லமையைப் பெற்றிருந் வர்; அவர் வேண்டியதில்லை என்றே கோயில்பாளையம் தொகுதி யில் 20 ஆயிரம் வாக்குகள் எதிர்ப் பெட்டியில் விழுந்திருக்கின்றன. ஒரு மந்திரியாக நிற்காமல் ஒரு சாதாரண காளைமாட்டுப் பெட்டிக் காரராக நின்றிருந்தால், பாவம், டிபாசிட் பறிபோயிருக்கும். இவர் பேசுகிறார் மக்களின் மனநிலைபற்றி! காங்கிரஸ்காரர்கள் மக்களைப் பார்த்தே ஒரு 'மகா மகம்' முடிந்துவிட்டதே! மக்கள் நம்பிக்கை வைத்துவிட்டார்களாம், அதனால் இவர்களைத் தேர்ந்தெடுத்து விட்டார்களாம்! கேரளத்திலே ஏன் அந்த மக்கள் காங்கிரசை நம்பவில்லை ? காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு இருக்கும் தனித் தன்மை ஏன் சேர நாட்டில் சேற்றுக்குள் அமுக்கப்பட்டது? அங்கே உள்ள அத்தனைபேரும் கம்யூனிசத்தைப் புரிந்துகொண்டு அந்தக் கட்சிதான் வேண்டுமென்று ஓட்டுப்போடவில்லை. காங் கிரசை ஒழித்துக்கட்ட கேரளத்து மக்கள் முடிவு கட்டினார்கள். ஆளும் கட்சி அருகதையற்ற கட்சி என்று ஆய்ந்து முடிவு கட்டும் கல்வியறிவு அவர்களிடம் இருந்தது. காங்கிரசை முறியடித்து வேறு எந்தக் கட்சிக்கு முடி சூட்டிவைக்கலாமென்று பார்க்கும்போது பி. சோ. கட்சியைக் காட்டிலும், சுயேச்சைகளைக் காட்டிலும் கம்யூனிஸ்டுக் கட்சியே அவர்களுக் குச் சிறந்ததாகப்பட்டது. ஆகவே அவர்களது ஓட்டுப் பெட்டி கள் நிறைந்தன. காங்கிரஸ் கட்சி தவிர பிற எல்லாக் கட்சிகளுமே ஓரளவு செல்லாக்குப் பெற்றிருப்பதிலிருந்து, காங்கிரசின்பா லுள்ள வெறுப்புத்தான் கம்யூனிஸ்டுகளுக்குப் பலத்தைத் தந்தது என்பது புலனாகும்? பி. சோ கட்சிகூட காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக் கொள்கையை கொஞ்சம் மாற்றி வேறு வர்ணம் கொடுத்து இது எனது புதிய கொள்கை என்று ஆரம்பத்திலேயே பறை சாற்றியிருந்தால் கேரளத்தில் மட்டுமல்லாமல் தமிழகத்தின் பல பகுதிகளில் ஓரளவு தலைதூக்கியிருக்க முடியும். இதை சுப்ரமணியம் புரிந்துகொள்ள வேண்டும். காங்கிரஸ் தமிழ் நாட்டிலே வெற்றி பெற்றது மக்கள் வைத்த நம்பிக்கையால் அல்ல அறியாமையால் என்பதை அவருக்கு நாம் மீண்டும் நினைவுறுத்துவோம். ஓட்டுப் பெட்டிகளில் சின்னங்களுக்குப் பதில் அபேட்சகர் களின் பெயர்களைமட்டும் எழுதிவைக்கும் காலம் வரும்போது காங்கிரசின் மீது நம்பிக்கை வைக்கும் மக்கள் எத்தனைபேர் என்று சுப்ரமணியம் பொறுத்திருந்து பார்க்கட்டும்.

உருவகம்

# பூந்தோட்டம்

சிந்தாமணி பி. ஏ.

பொன்னி வளங்கொழிக்கும் பூவிரிச்சோலை அது வண்ண மலர்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து காண்போரின் எண்ணங்களை எல்லாம் எங்கோ சிறகடித்துப் பறக்கும் வண்ணம் செய்துகொண்டிருந்தன. வீசும் மெல்லிய பூங்காற்றில் அசைந்தாடும் மலர்கள், மணிமுடிதரித்த பகை மன்னர்கள், தமிழகத்துப் பெரு வேந்தரின் காலடியில் தலைவணங்கி நிற்பதைப் போலிருந்தன. வகை வகையான மலர்கள் தொகை தொகையாய்க் குவிந்து கிடந்தன அந்தத் தோட்டத்திலே.

காவிரியின் நீரிலே தங்கப்பொடி கலந்திருக்கிறது என்பர். ஆமாம்! காவிரி தந்த நீரை உண்ட அத்தோட்டத்தின் மலர்ச்செடிகளும் தங்கம் என மின்னும் மேனி கொண்ட மலர்களைத் தாங்கி நின்றன.

தோட்டத்தின் நடுவே பசுங் கொடிகளால் அமைக்கப்பட்ட ஒரு பந்தல். அதன் கீழே பட்டு ரோஜாச் செடி ஒன்று. அதன் இரு பக்கத்திலும் இரண்டு மல்லிகைச் செடிகள். தோட்டத்தின் சொந்தக்காரர் மருதாசலம், தமது உயிரையே இந்த மூன்று செடிகளில் தான் வைத்திருந்தார். காலையில் எழுந்ததும் தோட்டத்துக்குச் செல்பவர் மாலையில்தான் திரும்பி வருவார். நீர் பாய்ச்சி, உரமிட்டு; களையெடுத்து, கருத்தெல்லாம் செலுத்திக் கண்காணிப்பதுதான் அவர் வேலை. பசுந்தளிர்விடும் செடிகளைக் காணும்போது, மதலையின் முகம் நோக்கும் தாயின் மலர்ந்த முகமாகிவிடும், அவரது வதனம்.

செடிகளெல்லாம் வளர்ந்தன. அவரது உள்ளம் மகிழ்ந்தது. முதுமைகூட மறைந்தோடியது அவரது மேனியிலிருந்து. ரோஜாச் செடி அருகேயிருந்த மல்லிகைச் செடி ஒன்று அரும்புவிட ஆரம்பித்தது. அரும்பு மலர்விரித்து சுகந்தம் வீசியது. மென்மலர் வீசிய நறுமணத்தை நுகர்ந்து கொண்டே நாளெல்லாம் தோட்டத்திலேயே கழித்தார்.

பக்கத்துத் தோட்டம் மாணிக்கத்துக்குச் சொந்தம். அவனும் அடிக்கடி அவரோடு வந்து உட்கார்ந்துவிடுவான். இரண்டு பேருமே பொழுது போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பார்கள். மாணிக்கமும், அவரது மலர்ச்செடிகள் நன்ருக வளருவதற்கான யோசனைகளைக் கூறுவான். அவனே மண்வெட்டியெடுத்து மலர்ப்பாத்திகளை சரி செய்வான். நாட்கள் இப்படியே நகர்ந்துகொண்டிருந்தன.

ஒருநாள், மருதாசலத்தின் உறவினர் ஒருவர் வந்திருந்தார். அவரை அழைத்துக்கொண்டு தோட்டத்துக்குப் போனர். பசுங்கொடி படர்ந்த பந்தலில் அமர்ந்தனர். புன்சிரிப்பு காட்டி நிற்கும் மல்லிகைச் செடியைக் கண்டதும் வந்தவர் அதைத் தமக்குத் தந்துவிடுமாறு பலவாறு வற்புறுத்தினர். மருதாசலமும் மற்றொரு செடிதான் இருக்கிறதே என்ற எண்ணத்தில் "சரி" என்று சொல்லிவிட்டார். வேருடன் பீடுங்கியெடுக்கப்பட்ட அம்மல்லிகைச் செடியை அவர் தமது தோட்டத்தில் கொண்டுபோய் சாமந்திச் செடியொன்றின் அருகே நட்டு வைத்தார். முதலில், கொஞ்சநாள் மல்லிகைச்செடி வாடியிருந்தாலும், நாளாக ஆக, வேர்விட்டு செழிப்போடு வளர்ந்தது. மலர் விரித்து, சிரித்து நின்றது.

மல்லிகைச்செடியை மற்றவர் ஒருவருக்குத் தந்ததைக் கண்ட மாணிக்கம், தானும் அவரிடம் ரோஜாச்செடியைக் கேட்டுப் பார்த்தான். பதிலே பேசவில்லை அவர்.

மருதாசலம் ஒருமுறை காய்ச்சல் வந்து படுத்துவிட்டார். மாணிக்கம் அவர் சொல்லட்டும் என்றுகூடக் காத்திராமல், தானே நீர் பாய்ச்சி உரமிட்டு எல்லா வேலைகளையும் செய்துவிட்டு, அவரிடம் வந்து சொன்னன். அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அதை ஓயாமல் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

ரோஜாச்செடி வளர்ந்தது. கண்ணைப் பறிக்கும் மரகதம்போல இலையும், தளிரும் விட்டு, காற்றில் நடமிடும் மங்கைபோல அசைந்தாடிக்கொண்டிருந்தது. அது மட்டுமா! மாணிக்கமும், மருதாசலமும் எதிர்பார்த்ததுபோல அரும்புவிட ஆரம்பித்தது.

அந்தச் சமயம் பார்த்து வேற்றூர் போகவேண்டிய அவசர வேலையொன்று வந்துவிட்டது மருதாசலத்திற்கு. மாணிக்கம் தோட்டத்தை தன்னுடையது போலப் பார்த்துக்கொள்வான் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது! ஆகவே அவனிடம் சொல்லிவிட்டு ஊர் சென்ருர்.

மாணிக்கம் தினம், தினம் தோட்டம் செல்வான். தன் தோட்டத்தை மறந்துவிட்டான் என்றுகூடச் சொல்லலாம். எப்போதும் பந்தலின் கீழே ரோஜாச் செடியருகே உட்கார்ந்து, செடி ஒவ்வொரு விநாடியும் அணு அணுவாக வளர்வதைக் கவனிப்பவன்போல கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருப்பான். அவ்வளவு ஆசை அவனுக்கு அந்தச் செடியின்மேல்.

ஒருநாள் காலையில் தோட்டம் சென்றவன், ஆச்சரியத்தால் திகைத்தே போனன். ஆமாம்! ரோஜாச்செடி, பட்டு இதழ் விரித்த மலர் ஒன்றைத் தாங்கி அவனை வரவேற்றது. மலரின் வண்ணமும், எழிலும் அவனுக்கு, எதையோ ஞாபகமூட்டின. சிவந்த இதழ்கள்......மெய்ம்மறந்த நிலையில் செடி அருகே சென்ருன். அங்கேயே அமர்ந்துவிட்டான். நாள்முழுதும் மலரிதழின் மென்மை அவனது விரல்களுக்கு இதம் தந்தது. அந்த இதழ்களில் சில கருகிக்கூடப்போய் விட்டன. அவனது விரல்களின் வெப்பம் தாங்காமல் செடியில் மலர்கள் பூத்துக்கொண்டே இருந்தன. அவனும் ரசித்துக்கொண்டேயிருந்தான்.

ஊருக்குச் சென்ற மருதாசலம் திரும்பி வந்தார். அகிலாண்டம் பிள்ளை என்ற தமது உறவினருடன் செடிகள் பூத்துக் குலுங்குவதைக் கண்டு பூரிப்படைந்தார். வந்திருப்பவருக்கு ரோஜாச் செடியைத் தந்துவிட்டு, தோட்டத்தையும் விற்றுவிட்டு, சொந்த ஊர் போகப்போவதாக மாணிக்கத்திடம் கூறினர். ரோஜாச் செடி தனக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் ஒரு பக்கம்; வாக்குக் கொடுத்து உறவினரை அழைத்து வந்துவிட்டாரே என்ற எண்ணம் மறுபக்கம். என்ன செய்வது என்று ஒன்றுமே சொல்லவில்லை அவன். அன்று மாலையே ரோஜாச் செடியிருந்த பூந்தொட்டி அங்கிருந்து வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. செடியிலே ஒரே ஒரு மலர் மட்டும் இருந்தது. ஆவல் தாங்காத மாணிக்கம், 'செடி கிடைக்காவிட்டாலும் மலராவது இருக்கட்டும்' என்று பறித்துவைத்துக் கொண்டான்.

மறு நாள் செடி காரில் ஏற்றப்பட்டது. மாணிக்கம் ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டேயிருந்தான். வந்தவர் செடியோடு ஊருக்குப் போய்விட்டார்.

நீண்ட நாட்களுக்குப் பின் ஒரு முறை அகிலாண்டம் இருக்கும் ஊருக்கு மாணிக்கம் சென்ருன். அவர் வீட்டுக்குப் போனன். அவரது அழகான தோட்டத்திலே பட்டு ரோஜாச் செடி, அரளிச் செடியருகே வைக்கப் பட்டிருந்தது. பூக்கள் நிறைய பூத்திருந்தன செடியில்.

என்னதான் இருந்தாலும் முன்போல மலரைப் பறிக்க முடியுமா? வேலி வேறு இருக்கிறதே! மேலும் மாற்றூர் தோட்டத்து மலரை பறிக்க முடியுமா? அல்லது பறிப்பதுதான் மனிதத் தன்மையாகுமா?

## நல்லவேளை-வடநாட்டுக்காரர்!

மக்களின் ஓட்டுகளை பயமுறுத்தல் மூலமும், பணப் பெட்டிகளைக் கொட்டிக் காட்டியதன்மூலம் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் பறித்துக்கொண்டு விட்டுள்ளார்கள். அப்படி வெற்றி பெற்றுப்போன காங்கிரஸ் எம். எல். ஏக்கள் சட்டசபை நடவடிக்கைகளில் எந்த விதத்தில் ஈடுபாடுள்ளவர்களாக இருக்கிருர்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் உண்மைக காங்கிரசுக்காரர்கள் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டி வரும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

'சட்டசபையில் தூங்கலாமா ?'

'சபையில் மூக்குப்பொடி போடலாமா ?'

—என்பன போன்ற 'மக்களுக்கு மிக மிகத் தேவையான'(?) கேள்விகளைக் கேட்டதோடு மட்டுமல்லாமல் சர்க்கார் கஜானுவைத் தங்கள் சொந்தத்திற்குப் பயன்படுத்தவும் அவர்கள் தவறவில்லை. சர்க்கார்பேரில் காங்கிரசுக்காரர்கள் நடத்தும் விருந்துகள் பற்றியல்ல நாம் குறிப்பிடுவது; சமீபத்தில் பம்பாயில் போலீசாரால் கைது செய்யப்பட்டதொரு காங்கிரஸ் எம். எல். ஏ. யின் கதை நம்மை விருந்து விஷயத்துக்குக்கூட அழைத்துச் செல்லவில்லை.

**சென்ற மார்ச் அசெம்பிளிக் கூட்டங்களுக்கு வராமலே பிரயாணப்படி, தினப்படி முதலியவற்றை வாங்கியதாக பம்பாய் காங்கிரஸ் எம். எம். ஏ. ஸ்ரீ ஈச்வரபாய் சாவ்தா என்பவரை லஞ்ச ஒழிப்புப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.**

—பத்திரிகைச் செய்தி.

எப்படி இருக்கிறது கதை?

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்!

## தியாகிகளே!

**''வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது'' என்ற நமது சுவ ரொட்டிகளைப் பார்த்து கேலி செய்தார்கள். சிலர் 'இது அச் சுப் பிழை' என்ருர்கள். இதோ ஒரு சான்று! கேளாக் காதர்கள் பார்த்துக் கொள்ளட்டும்!'**

ரூர்க்கேலா, பிலாய், துர்காப்பூர் ஆகிய மூன்று உருக்குத் தொழிற்சாலைத் திட்டங்களுக் கும் 1957-58ம் ஆண்டில் மூல தனச் செலவு வகையில் மொத் தம் ரூ. 156·83 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

நடப்பு நிதி ஆண்டில் இம் மூன்று திட்டங்களுக்கும் மொத் தம் ரூ. 31 6 கோடி செலவிடப் படும் என்று மதிப்பிடப்பட்டிருக் கிறது; இது தவிர ரூர்க்கேலாத் திட்டத்தை நிறைவேற்றி வைக் கும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டிருக்கிற, சர்க்காருக்குச் சொந்தமான 'இந்துஸ்தான் ஸ்டீல் பிரைவேட் லிமிடெட்' என்னும் ஸ்தாபனத்துக்குக் கட ஞக ரூ. 14 கோடி வழங்கப்பட் டிருக்கிறது.

### ரூ. 156 கோடி

அடுத்த ஆண்டு 'பட்ஜெட்' டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத் தம் ரூ. 156·83 கோடியில் ரூர்க் கேலாத் திட்டத்துக்கு மட்டும் சுமார் ரூ. 60 கோடி செலவிட உத்தேசிக்கப் பட்டிருக்கிறதாம். இந்த ஆண்டில் இதற்கு ரூ. 14 கோடி கடன் தொகை பயன் படுத்தப்பட்டு வருகிறது; உருக் குத் தொழிற்சாலைக்கான பல் வேறு வகை யந்திர சாதனங் களுக்கும் ஜெர்மானிய நிறு வனங்களிடம் 'ஆர்டர்'கள் கொடுக்கப்பட்டுள்ளன; தொழிற்சாலைப் பிரதேசத்தின் பல்வேறு பகுதியிலும் கட்ட நிர்மாண வேலைகள் நடைபெறு கின்றன என்றும் கூறப்பட்டுள் ளது.

### பிலாய்

பிலாய் திட்டத்துக்கு 1957-58ல் சுமார் ரூ. 63·33 கோடி செலவாகுமென்று எதிர்பார்க் கப்படுகிறது; நடப்பு நிதி ஆண் டில் இதற்கு ரூ. 13 கோடி செல வாகும் என்று மதிப்பிடப்பட் டிருக்கிறது; தொழிற்சாலைக்கும் நகர்ப் பகுதிக்கும் நிலங்கள் வாங் கப்பட்டுவிட்டன; யந்திர சாத னங்கள் ரஷ்யாவிலிருந்து பிலா யுக்கு வந்துசேர ஆரம்பித்துவிட் டன; பல நிரந்தரக் குடியிருப்புக் கட்டடங்களும் அங்கு கட்டப் பட்டுள்ளன. என்றும் விவரம் தரப்படுகிறது.

### துர்காபூர்

துர்காபூரிலுள்ள மூன்ருவது உருக்குத் தொழிற்சாலைக்கு அடுத்த நிதி ஆண்டில் ரூ. 33.5 கோடி செலவாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது; நடப்பு ஆண் டில் இதற்கு ரூ. 13.6 கோடி செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. இத்திட்டத்துக் காக 6,000 ஏக்கரா பரப்பள வுள்ள நிலம் வாங்கப்பட்டிருக் கிறது. இதற்கான இயந்திர சாதனங்கள் பிரிட்டனிலிருந்து வந்துகொண்டிருக்கின்றனவாம்.

### 10 இலட்சம் டன்

ஒவ்வொரு உருக்குத் தொழிற் சாலையும் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் டன் வீதம் உருக்குக் கட்டிகள் உற்பத்தி செய்யக் கூடியவையாக இருக்கும்.

### நிலக்கரித் தொழிற்சாலை

இத்தொழிற்சாலைகளுக்கு ஆண்டொன்றுக்கு 46 இலட்சம் டன் வீதம் சுத்திகரிக்கப்பட்ட நிலக்கரி 'சப்ளை' செய்வதற்காக சர்க்காருக்குச் சொந்தமாக இரண்டு நிலக்கரிச் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்தவும் இரும்பு உருக்கு மந்திரி அலு வலகம் முடிவு செயதிருக்கிற தாம். தனியார் துறையில் ஏற்கனவே அநேக நிலக்கரிச் சுத்திகரிப்பு நிலையங்கள் வேலை செய்துவருகின்றன; சர்க்காருக் குச் சொந்தமான நிலக்கரிச் சுத்திகரிப்பு நிலையமொன்று கர் காலியில் ஏற்படுத்தப்பட்டு வரு கிறது. 1959-60 கடைசிவாக் கில், நாட்டிலுள்ள உருக்குத் தொழிற்சாலைகளுக்கு ஆண் டொன்றுக்கு ஒரு கோடி டன் வீதம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ் விரண்டு நிலக்கரிச் சுத்திகரிப்புச் சாலைகளுக்கும் 1957 - 58-ல் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக் கிறது; இவைகளுக்கு மொத்தம் ரூ. 5 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என் றும் பெருமிதத்தோடு டெல்லி சர்க்கார் அறிவிக்கிறது.

**கண்ணதாசன் நிகழ்ச்சிகள்**

★

ஏப்ரல் 2—சூளை
,, 3—கோடம்பாக்கம்
,, 7—கோலார்-தங்கவயல்

# பட்டணத்துப் பணம்!

★

ஏப்ரல் 8ந் தேதி சென்னையில் பொதுத் தேர்தல் நடை பெற்றபோது, இந்த நாட்டுக்குச் சட்டத்தையும், நீதியையும் வகுத்துத் ''தரும்'' காங்கிரசார் நடந்துகொண்ட முறை கொஞ்சங்கூட ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் அமைய வில்லை. டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் வெற்றிக்கு பெரும் பெரும் பண முதலைகளெல்லாம் பாடுபட்டார்கள். ஏன், சென்னை சர்க்காரே பாடுபட்டிருக்கிறது! அவர்கள் கையாண்ட 'யோக்யமான' நடவடிக்கைகளை 'சுதந்திரம்' என்னும் வார இதழ் படம் பிடித்தாற்போல் எழுதியிருக் கிறது. அதில் ஒரு பகுதி இது:

''இந்திய முதலாளிகளுக்குப் பலவித சலுகைகளை செய்து கொடுத்து அவர்களுக்கு ஆதரவாக மக்களை வரி யினுல் வாட்டி வதைப்பவர் திரு. டி. டி. கே. என்று எதிர்க் கட்சியினரால் கூறப்படும் வாதம் நூற்றுக்கு நூறு உண்மை என்பதை அவர்களே சந்தேகத்துக்கிடமின்றி இப்போது தெளிவாக்கியுள்ளனர்.

சென்னை மாகாணத்திலுள்ள பெரும் பணத் திமிங்கிலங் களும், மோட்டார் முதலாளிகளும் டி. டி. கே. பிரசாரத் துக்கு முனைந்து வேலை செய்தது அனைவரும் அறிந்ததே. 7-3-57 வியாழக்கிழமை 'சுதேசமித்திரன்' தின இதழைப் பார்த்தால் ஆதாரப் பூர்வமாக இவ்விஷயம் விளங்கிவிடும்.

டி. டி. கே.க்கு ஏன் ஓட்டுப்போட வேண்டும் என்று கால் பக்கத்துக்கு 5 விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள் ளன. இதில் ஒன்று யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) லிமிடெட் பெயரால் வெளியிடப்பட்டிருக்கிறது. கார்களை இறக்குமதி செய்து விற்பனை செய்யும் பெரிய ஸ்தாபனம் இது. இதன் முதலாளிகளுக்கு டி. டி. கே.யின் வெற்றி யில் ஏன் இவ்வளவு அக்கறை?

இரண்டாவது விளம்பரம் 'காவேரி ஸ்பின்னிங் வீவிங் மில்ஸ்' லிமிடெட் பெயரால் பிரசுரிக்கப்பட்டுள்ளது. டி. டி. கே. வர வேண்டுமென்று இவர்கள் ஏன் இவ்வளவு கவலைப்படுகிருர்கள்?

மூன்ருவது விளம்பரம் 'கோத்தாரி அண்ட் சன்ஸ்' பெயரால் வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டின் இப்பெரு முதலாளிகள் டி. டி. கே.க் காகப் பாடுபடுவதிலிருந்தே அவர் முதலாளிகளின் கை யாள் என்பது வெட்டவெளிச்சமாகத் தெரியவில்லையா?

மார்ச் 8வ வெள்ளிக்கிழமையன்று திரு. டி. டி. கே.க் காக தேர்தலில் வோட்டர்களைக் கொண்டு வந்த கார்களில் சிலவற்றின் நெம்பர்கள்:

**MSY** 7219 **(Jeep)**, 3820, 6540, 5505, 6867, 4182, 2355, 0600, 6867, 3839, 2560, 7439, 7520, 3839, 3686, 6766, 3683, 2175, 1919, 6720, 0660, 4982.

**MSZ** 7250 **(Jeep)**, 4909, 3528, 4909, 5779 7104, 6602, 4966, 912.

**MSP** 8663, 4091, 6868, 6757, 1954, 1600 1972.

**MDR** 1907, 1056, 1783.

**PSY** 4982. **MDU** 4966. **MSC** 6129. **MDS** 305.

**ADK** 187 **(Jeep)**.

# அடுத்த குடியரசுத் தலைவர்

(கு)டியரசுத்தலைவர் ராஜேந்திரரின் பதவிக்காலம் மே மாதம் 2ம் தேதியோடு முடிவடைகிறது. ஜனநாயக முறைப்படி அந்தப் பதவிக்குத் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பதவிக்கு, எதிர்க்கட்சிகளின் சார்பில் யார் யார் போட்டியிடப் போகிறார்கள் என்பது இதுவரை வெளியாகாவிட்டாலும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடப் போகிறவரின் பெயர் வெளியாகிவிட்டது. புதியவர்கள் யாருமல்ல; பழைய ராஜேந்திரப் பிரசாத் தான் மறுபடியும் போட்டியிடப் போகிறாராம்! காங்கிரஸ் கட்சி அவரைத்தான் நிறுத்தி வைக்கப்போகிறதாம்!

இந்தியத் துணைக்கண்டத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம். எல். ஏ. க்களும், எம். பி. களும்தான் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களாவார்கள். எப்படியும் மே மாதம் 10ந் தேதிக்குள் தேர்தல் நடந்துமுடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தனை ஆண்டு காலமாக, டாக்டர் ராஜேந்திரர் குடியரசுத் தலைவராக இருந்தார். பிரதம மந்திரியிலிருந்து அத்தனைபேரும் அவரை ஒரு நோயாளியைப் போல் நடத்தினார்கள். தூக்கி விடுவதற்கு ஒருத்தரும், உட்கார வைப்பதற்கு ஒருத்தருமாக அவருக்கு ஏவலாட்கள் பணி புரிந்தார்கள். பரம்பரை மகாராஜாக்களுக்குண்டான உபசரணைகள் அவருக்கு நடத்திக் காட்டப்பட்டன. அத்தகைய ஜமீன் நோயாளிதான் இந்த முறையும் குடியரசுத் தலைவராக நிறுத்தப்பட இருக்கிறார். காங்கிரஸ் செயற்குழு அவரது பெயரைத்தான் சிபாரிசு செய்திருக்கிறது. இந்தப் போக்கைக் கண்டித்து தென்னாட்டில் ஆங்காங்கே பேச்சு நடக்காமலில்லை. நடக்கிறது. கேரளத்தில் இதற்குப் பலமான எதிர்ப்புகள் முளைத்திருக்கின்றன. 'கேரள கௌமுதி' என்ற மலையாளத் தினசரிகூட காங்கிரஸ் செயற்குழுவைப் பலமாகக் கண்டித்துத் தலையங்கம் எழுதியிருக்கிறது.

செயற்குழு சிபாரிசு செய்வதும் A. I. C. C. சரிவைப்பதுமான காரியம் இன்றைய நிலைக்கு-முறையற்றதாகப் படுகிறது. அதனால் அடுத்த ஐந்து வருடத்திற்குக்கூட இந்தியாவின் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாதாகத்தான் இருக்குமென இப்போதே கூறலாம். விருப்பமுள்ள எந்த நபரையும் எந்த பதவிக்கும் நிறுத்த உரிமையுண்டு. அந்த உரிமையின் அடிப்படையில்தான் காங்கிரஸ் கட்சி ராஜேந்திர பிரசாதை தலைவர் பீடத்திற்கு நிறுத்தத் தீர்மானமெடுத்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் இந்த உரிமைக்கு எதிராக கேள்விக்குறி எழுப்பாமலேயே, இந்த பெயர் நியமனத்தின் மட்டரகமான போக்கை விமர்சிக்க தக்க காரணங்களுண்டு. நிறையச் சம்பளம் பெற்று வேலையாதும் செய்யாது வாழும் ஒரு தலைவரைத்தான் இந்த நாட்டு அரசியல் சட்டம் அளித்திருக்கிறது. தலைவரின் பிரதி மாத சர்பளம் பதினாயிரம் ரூபாயாகும். இதற்கும் பின்னால் பெரிய தொகை அலவன்சாகவும் அளிக்கப்படுகிறது. எளிய வாழ்க்கையும் உயர்ந்த நோக்கமும் வேண்டுமென்ற காந்தியாரின் சீடர்கள் தான் இதுபோன்ற ஒரு வெள்ளை யானையைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். இந்திய யூனியன் தலைவருக்கு எதற்காக இத்தனை பெரிய சம்பளமென்று கேட்டால் நேருவும் மற்றவர்களும் கூறுவார்கள் அது இந்திய மக்களின் அபிமானம் காப்பாற்றுவதற்கென்று! அது போகட்டும். ஒருவருக்குத்தான் தொடர்ந்து இந்த பதவியும் சம்பளமும் தந்து வரவேண்டுமென்று காங்கிரஸ் காரர்களுக்கு ஏன் இத்தனை நிர்ப்பந்தம்? இந்திய யூனியன் தலைவர் பதவிக்கு ராஜேந்திர பிரசாத் ஒருவர் மட்டும் தான் தகுதியுடையவர் என்பதில்லை. பார்ப்பனர்களின் கால்களைச் சுத்தப்படுத்துபவரும், சர்ப்பூசை செய்பவருமாகிய ஒருவர்தான் தலைவராக இருக்க வேண்டுமென்று அரசியல் சட்டத்தில் கூறவில்லை. யாருக்கு வேண்டுமாயினும் யூனியன் தலைவராவதற்கு வாய்ப்பு தருவதுதான் இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கமாகும். ஏன் ஒரு தமிழரைத் தலைவராக்கக் கூடாது? சிகிச்சைக்குப் பெயர் போனவர்களல்லவா காங்கிரஸ்காரர்கள்! ஒரு தமிழரையோ முஸ்லிமையோ தலைவராக வைத்து சாதி இந்து மனப்பான்மைக்கு 'அடி' தருவதற்கு எதனால் காங்கிரஸ்காரர்கள் துணியவில்லை? இந்தியாவின் வெளிநாட்டுப் புகழை வளர்க்கவேண்டுமானால் வேறு யாரையாவது தலைவராக்கலாம்; உத்தரப்பிரதேசமும் பீகாரும் சேர்ந்துதான் இந்தியாவின் அரசியல் இயந்திரத்தைக் கையில் அமுக்கி வைத்திருக்கவேண்டுமா? தென் இந்தியாவிலிருந்து ஒருவரை தலைவராக்கினால் என்ன? காங்கிரஸ் செயற்குழுவின் சிந்தனை இந்த வழியில் திரும்பாமல் போனது வருந்தக் கூடியதே! சொல்லில் முன்னேற்றமும் செயலில் குறுகிய மனப்பான்மையும் காங்கிரசின் கொள்கையென்று; இவைகளிலிருந்து புலனாகவில்லையா? ★


நடன நாடகம்

6-4-'57 சனி மாலை 6-30 மணிக்கு

கோகலே மண்டபத்தில்

(அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1)

நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில்

குமாரி E. V. சரோஜா

நடன நாடகம் நடைபெறும்.

கட்டணம் : ரூ. 3, 2, 1

நண்பர் சங்கம், சென்னை-13.

டிக்கட்டுகள் இராயபுரம் அறிவகத்தில் கிடைக்கும்.


## ஆசிரியத் தோழருக்கு

-இராசன்-

# கட்சியின் கண்ணியம்!

அன்புள்ள ஆசிரியருக்கு, வணக்கம். தென்றல் மூன்று வாரமாக வெளிவராததால் தேர்தல் நிலை பற்றிய தங்கள் கருத்தை அறிய முடியாமல் இருந்தது. இந்த வாரம் தென்றல் வெளிவந்ததும், மிக ஆவலோடு வாங்கிப் பார்த்தேன். என்னுடைய ஆவலை பூர்த்திசெய்யும் விதத்தில் ஏற்ற கருத்துக்களை, தங்களுக்கே உரித்தான நடையில் மிக அழகாக எழுதியிருந்தீர்கள். "தேர்தலும் நாமும்" என்ற கட்டுரையும், "தோல்வியும் வெற்றியும்" என்ற தலையங்கமும் என்னுடைய கவனத்தை வெகுவாக கவர்ந்துவிட்டன. நமது தோல்விக்குக் காரணம் நமது அரசியல் நாகரிகந்தான் என்ற தங்கள் கருத்தை மனப்பூர்வமாக ஆதரிப்பவர்களில் நானும் ஒருவன். அதற்கு தாங்கள் எடுத்துக்காட்டிய "ஆயிரம் அயோக்கியர்களுக்கிடையில் ஒருவன் யோக்கியத்தன்மையை கடைப்பிடித்தால், அவன் அதில் சிக்கி மடியவேண்டியதுதான்' என்ற உவமை மிகவும் பொருத்தமுடைத்து. இன்று காங்கிரஸ்காரர்கள் 148 இடங்களில் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்றால், அதில் ஒருவர்கூட கொள்கையை மட்டுமே மூலதனமாகக் கொண்டு வெற்றி பெற்றவர்களல்ல என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மை. காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் நீண்டகால அனுபவமுடையவர்கள். ஆகவே எந்த வகையில் எப்படி "காரிய" மாற்றினால் வெற்றி பெறலாம் என்பதை அறிந்து அதன்படி "காரிய" மாற்றி சுலபமாக வெற்றி பெற்றுவிட்டார்கள். அவர்களின் தில்லுமுல்லுகள் அரசியல் விழிப்பு ஏற்படாத கிராமப்புறங்களில்தான் வெற்றிபெற்றிருக்கின்றன. சென்னை நகரில் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்வியே இதற்குச் சிறந்த உதாரணம்.

நூற்றுக்கு எண்பது பேர் படித்தவர்கள் உள்ள கேரளத்தில் காங்கிரஸ் படுதோல்வியடைந்திருக்கிறது. இதிலிருந்து கிடைக்கும் முடிவு, படித்தவர்களும், பண்பாளர்களும் காங்கிரசை ஆதரிக்கவில்லை என்பதுதான். தமிழ்நாட்டைப் பொருத்த வரையில், நம்முடைய தோல்விக்குக் காரணம் கிராமப்புறங்கள்தான். கிராம மக்களின் அறியாமை, அரசியல் விழிப்புணர்ச்சியற்ற தன்மை காங்கிரசின் வெற்றிக்கு அடி கோலிவிட்டது. ஆகவே இந்த நாட்டில் காங்கிரசை முடியடிக்க வேண்டுமானால், நம்முடைய அடுத்த பணி, கிராமப்புறங்களில் அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த தீவிரப் பிரச்சாரம் புரிவது மட்டுமல்லாமல், அவர்களுடைய அபிமானத்தைப் பெறும் வகையில் அன்றாடப் பிரச்சினையிலிருந்து நீண்ட காலப் பிரச்சினை வரையில் ஈடுபட்டு சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும். அதற்காக நம்முடைய சக்தி முழுவதையும் பயன்படுத்த வேண்டும். அறிஞர்களும் ஆற்றல்மிக்கோரும், படித்தோரும், பண்பாளரும் நம்முடைய இயக்கத்தில்தான் ஏராளம். எத்தகைய அரும்பெரும் ட்டங்களையும் நிறைவேற்ற நம்மால் முடியும். ஆகவே தாங்களும், மற்றத் தலைவர்களும் கலந்து யோசித்து சிறந்த திட்டங்களை தீட்டி, நமது கழகத்தில் தேங்கிக் கிடக்கும் சக்தியை பயன்படுத்தி நாடு வாழவும், நமது கழகம் மேலும் வளர்ச்சியுறவும் ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். தங்கள் அன்புள்ள

இரா. தண்டபாணி

கடலூர்.

'ரிஷிகர்ப்பம்' என்ற வார்த்தையை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். திடீரென்று வந்து, படாரென்று முடிந்துவிடுவதை இப்படி அழைப்பார்கள்! இந்த ரிஷிகர்ப்பத்தை 'உவமைபூர்வ'மாகத் தெரிந்துகொள்வதற்கு நமது தமிழக அரசியல் ரொம்பவும் பயன்படுகிறது!

இந்த ரிஷிகர்ப்பத்தின் ஈடு இணையற்ற தந்தை தோழர் ஈ. வே. ரா.வாகும்! இதைப் பெற்றெடுத்த பெருந்தகை அவர்தான்! அவருக்கு வழி வழி வம்சம் ஏராளம்!

''எந்தத் தடியையும் எடுத்து காங்கிரசுப் பாம்பை அடிப்பேன்!'' — இது ஈ. வே. ராவின் **முதல்தேதி கர்ப்பம்.**

''காமராசரைக் காப்பதற்காக காங்கிரசுப் பாம்பை எடுத்து எதிர்க்கட்சியை அடிப்பேன்!

**—இது மேற்படி கர்ப்பத்தின் சிதைவு!**

''கம்யூனிஸ்டுக் கட்சிக்குமேல் ஒரு முற்போக்குக்கட்சி உலகில் ஏது?''

—இது அவரது **இரண்டாவது கர்ப்பம்**

''பச்சைத்துரோகிகள்-அயோக்கியர்கள், உலகிலேயே கம்யூனிஸ்டுகள்தான்!''

**—இது மேற்படி கர்ப்பத்தின் முடிவு!**

இது 'ஒரு சோறு பதம்!' கொள்கை இராத்தங்காது! குழப்பத்திலேயே கொள்கை 'ஜனனம்'! எடுத்துச் சொல்ல பயமாக இருக்கிறது!! ஏனென்றால் அவர்கள் இடுப்பில் கத்தி இருக்கிறதாமே!

★

உலகம் கிடுகிடுக்கும்படியான திட்டம் (நிரந்தரத்) தலைவரிடம் தயாராக உள்ளதாம்-'விடுதலை' சொல்கிறது! அடிசக்கை! 'ரெடிமேட்' திட்டம்! ஒருவேளை, பூமியைப் பிளந்து, அடிவாரத்திலே அணுகுண்டு போடுவதாக இருக்கலாம்-அப்படியிருந்தால்தான் பூமி 'கிடு கிடு' என்று நடுங்கும்! தோழர் ஈ. வே. ரா. சாமான்யப்பட்டவரல்ல! அவர் எதைச் செய்தாலும் உலகம் 'கிடுகிடு' என்று நடுங்கும்!

இருபது வயதில் திருமணம் நடத்தினால், உலகம் தூங்கும்; 72 வயதில் நடத்தினால்...? 'கிடுகிடு' என்று நடுங்கும் - உடம்பு முதல் உலகம் வரை! செய்து காட்டினரே அதைச் சொல்லுங்கள்!

பிள்ளையாரை உடைத்தார் - மகத்தான புரட்சி! உலகம் 'கிடுகிடு'வென்று நடுங்கிற்று. பிறகு விசாரித்ததில், சொந்தத்தில் பிள்ளையார் செய்து உடைத்ததாகத் தெரியவந்ததால் உலகம் 'சடசட'வென அடங்கிவிட்டது!

ராமர் படத்தை எரித்தார் - 'கிடு கிடு'வென நடுங்கிற்று! எது? அச்சாபீஸ்! புதிய ராமர் படங்கள் அவ்வளவு வேகமாகத் தயாராயின. தொழில் வளர்ந்தது!

அவர் நாக்கு ஒன்றைத் தவிர பாக்கி எல்லாம் நடுங்கிக்கொண்டே இருக்கிறது. போங்கள்!

★

தோழர் - சொல்வலர் - சம்பத் அவர்கள் ஒரு கூட்டத்தில் சொன்னார்கள்:

''காங்கிரசுக்காரர்களின் வெற்றியை, தி. க. தோழர்கள் உற்சாகமாகக் கொண்டாடுகிறார்கள். இப்படி, ஊரில் யாராவது பெறுகிற வெற்றியைத்தான் அவர்கள் கொண்டாட முடிகிறதே தவிர, அவர்களுக்கென-பாவம்!-சொந்த வெற்றி எதுவும் கிடையாது!''-எப்படி!

''கட்ரூட்டாம் பட்டியில் கம்யூனிஸ்ட் வெற்றி; மீரான் சாகிபு தெருவில் மிட்டாய் விநியோகம்!''

— இது போன தேர்தலில்!

''தற்குறியாம் பட்டியில் காங்கிரசு வெற்றி; தந்தை பெரியார் (?) வெற்றி ஊர்வலம்!''

— இந்தத் தேர்தலில்!

— இடைப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை, சொந்த வெற்றி ஏதாவது? காங்கிரசு அபேட்சகர்கள் கொடுத்த 'மணி'யையும் கைப்பிடித்த 'மணி'யையும் தவிர வேறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை! அந்தோ பரிதாபம்! அவர்களுக்கு நம் அனுதாபம்!

★

புரசவாக்கத்தைப் 'பெரியார் பாக்க'மாக மாற்றுவதாகக் கூறி தி. மு. க. அபேட்சகர்கள் ஓட்டுக் கேட்டார்களாம். என்ன இந்தத் தி. மு. கழகத் தோழர்கள்! கடல் போன்று பரந்து கிடக்கும் 'பெரியா'ரின் செல்வாக்கை இப்படியா பயன்படுத்திக்கொள்வது! இப்படித்தான் முன்பு ஒரு கிழவியிடம், ''''பெரியார்'' கட்சியும் இதுவும் ஒன்றுதான்'' என்று கூறி ''ஆள் பிடி''த்திருக்கிறார்கள்! செச்சே! ஒரே லட்சியத்தை-வெங்காயம் கலக்காமல்-உறுதியாகக் கடைப்பிடிக்கும் ஒரு தலைவரின் புகழை இப்படியா பயன்படுத்துவது! வீட்டுக்கு வீடு 'பெரியா'ருக்கு எவ்வளவு செல்வாக்கிருக்கிறது! அப்பப்பா! பெண்கள் வெங்காயத்தைப் பார்க்கும்போதெல்லாம் 'பெரியா'ரைத்தான் நினைக்கிறார்களாம்! கடிகாரத்தில் 'மணி' பார்க்கும்போதுகூட 'பெரியார்' ஞாபகம் வருகிறதாம்!

''படேல் - கருப்புக்கொடி - பணம்'' இப்படி எதிலும் அவர் முகம்! அது மட்டுமா?

இப்போதெல்லாம் பிரியாணியைப் பார்க்கும்போது தி. க. தோழர்களின் ஞாபகமே வருகிறது! அந்த பிரியாணிக்குப் பக்கத்தில் ஒரு கதர்க்கொடியையும் கண்டால் அந்த ஞாபகம் படமாகப் பிடிக்கப்படுகிறது! நிற்க;

அடுத்த தேர்தலில் தி. க. தோழர்கள் தங்கள் 'ஓட்'டை அதிகப்படுத்தப் போகிறார்களாம். மூன்று ரூபாயில் கட்டிவரவில்லை என்றும், குறைந்தது ஐந்து ரூபாயாவது 'நாள்கூலி' தரவேண்டுமென்றும் நி—தலைவருக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்களாம். விவசாயிகளுக்காக நியாய வாரச் சட்டம் கொண்டுவந்ததுபோல் இதற்கும் ஒரு சட்டம் கொண்டுவர, பச்சைத்தமிழரை அணுகியிருக்கிறார்களாம். சமீபத்தில் கூடப் போகும் புது அசெம்பிளியில் இந்த மசோதா வரும் என்றும், அப்படி வந்தால் கண்ணீர்த்துளி எம். எல். ஏ. க்கள் எதிர்க்கமாட்டார்கள் எனவும் தி. க. வின் 'புரோட்டா' செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

★

காஞ்சீபுரம் முதலியாரைத் தோற்கடிக்க முடியாததால் தான், ஈரோட்டு வேங்கடப்ப நாயக்கர் மகன் ராமசாமி நாயக்கர் என்ற 'இந்து, பலிஜா நாயுடு, பகுத்தறிவுவாதி' ஏற்காட்டுக்குப் போயிருக்கிறார் என்ற செய்தியை, மேற்படி 'புரோட்டா' செய்தி ஸ்தாபனம் வன்மையாக மறுக்கிறது. மேற்படி செய்தி விஷமத்தனமானது என்றும், கண்ணீர்த் துளிகளின் கட்டுக்கதை என்றும் ஒரு பனிரெண்டு ரூபாய்த் தொண்டர் சொல்லியிருப்பதையும் மேற்படி ஸ்தாபனம் வெளியிட்டது.

★

''தோழர் ஈ. வே. ரா.வின் ரத்தக்கொதிப்புக்குக் காரணம் சித்தக்கொதிப்பு என்றும், இந்த மொத்தக் கொதிப்புக்கும் அடிப்படை, கத்திக் கத்திப் பத்துப் பதினைந்து ஊர்களில் பேசியதுதான் என்றும், செத்துப் பிழைக்கும் தி. க. வின் 'குத்து'த் தோழர் சொல்கிறார்'' என முத்து முத்தாக மேற்படி ஸ்தாபனம் ஒரு செய்தியை இன்று மாலை வெளியிட்டது!

மேற்படி செய்தியை ''ஜ இஸ் தி பிரைமினிஸ்டர்'' காமராசரிடம் காட்டியபோது, இப்படி இடுக்குத்தனமான அடுக்குத் தமிழில் செய்தி வெளியிடுவது அடக்கப்படவேண்டுமென்றும் கொச்சைத் தமிழையே பச்சைத் தமிழர் விரும்புவதாகவும் தெரியவந்தது.

★

**கடைசித் தந்தி:**

ஈரோட்டு ராமசாமி நாயக்கர் அண்ணாத்துரை ஜெயித்தால் தன் தாடியை எடுப்பதாகச் சொன்னபடி ஏற்காட்டில் தாடியை எடுத்துவிட்டாராம்! மறு தாடி முளைக்கும்வரை மலையை விட்டு இறங்குவதில்லை என முடிவுகட்டித்தான் ஓய்வெடுத்து வருகிறாராம். (செய்தி இன்னும் முடியவில்லை)—பு. ரு. நி.

—**வணங்காமுடி**


விற்பனையாகிறது!

எஸ். எஸ். தென்னரசு

எழுதிய நாடகம்

**தலைநகரம்**

விலை ரூ. 1-4-0

★

மலர் நிலையம்,

133, பிராட்வே, சென்னை-1.


ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு